நிலையிலே இந்தக் கோரிக்கையை இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, அதே இடத்தில் வேண்டிய மருத்துவ வசதிகளை நிரந்தரமாக அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, அந்தக் கிராமம் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள மருந்தகங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் உள்ள இடைப்பட்ட தூரம், இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, கிராமங்களில் புதிதாக கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கீழக்குறிச்சி கிராமத்தைச் சுற்றி 10,000 கால்நடைகளுக்கு மேல் உள்ளதால் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் அந்தக் கிராமத்திற்குப் புதிதாக கால்நடை மருந்தகம் தேவை என்றும், இலவசக் கட்டிடம் தருவது உட்பட, தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு துணைக் கேள்விதான் என்று முன்பே சொன்னேன்.

வினா எண் 60, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

60—

இந்து சமய அறநிலையத் துறையின் ஆலயங்கள்

*40033—**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் எத்தனை?

(ஆ) கட்டுப்பாட்டுக்குள் வராத இந்துக் கோயில்கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை மொத்தம் 35,477 ஆகும்.

1996 பிப்ரவரி 17]

(ஆ) துறையின் கட்டுப்பாட்டிற்குள் வாராத திருக்கோயில்களின் விவரம் கொடுக்க இயலாது.

முற்பகல் 11.15

திரு. ந. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்று இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய 35,477 கோவில்களுடைய சொத்துக்கள் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தருவார்களா? காரணம் இன்று பல கோவில்களில் இருக்கக்கூடிய சொத்துக்கள், நிலங்கள் எல்லாம் குத்தகைக்கு விடப்பட்டு அந்தக் கோவில்களுக்கு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள அனைத்துக் கோவில்களுக்கும் ஒருகால பூஜை உண்டு என்று நம்முடைய ஆளுநர் உரையில் தெரிவித்து இருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்னவென்றால், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் எத்தனை; கட்டுப்பாட்டுக்குள் வராத ஆலயங்கள் எத்தனை என்பது தான். இதைவிட்டுவிட்டு சொத்து, சுகம் எல்லாவற்றுக்கும் போகிறீர்களே? (சிரிப்பு)

திரு. ந. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 35,477 கோவில்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவர்கள், இன்னும் இதைவிட பல மடங்கு அதிகமாக கட்டுப்பாட்டுக்குள் வராமல் இருக்கிற கோவில்களை எப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இருக்கிறீர்கள்? உபரி நிதியிலிருந்து எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற சோளிங்கர் கோவிலுக்கு இழுவை ரெயில் அமைக்க ஒருகோடி ரூபாய் தாங்கள் கொடுக்க முன்வருவீர்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் நடத்தும் கோவில்களில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால்தான், அதை அரசு எடுத்து நடத்த முடியும். அப்படிப் பிரச்சினை இருந்தால்தான், அந்தக் கோவிலை அரசு எடுக்கும். மற்றபடி ஒட்டுமொத்தமாக அனைத்துக் கோவில்களையும் எடுக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

56--

தளி தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*35755—திரு. மு. வெங்கடராம ரெட்டி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—